சுருக்கம்

விளையாட்டுகள் – 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கபடி போட்டி – இந்திய அணியில் பங்கேற்ற திரு எஸ்.ராஜகுரு தங்கப் பதக்கம் வென்றவர் உயரிய ஊக்கத் தொகை ரூ.30.00 இலட்சம் சிறப்பினமாகக் கருதி வழங்கி – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

## இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (எஸ்1) துறை

அரசாணை (நிலை) எண்.37

நாள்: 11.08.2015
ஆடி–26
திருவள்ளுவர் ஆண்டு – 2046

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.38, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (எஸ்1) துறை, நாள் 19.12.2011
2. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலரின் கடித எண்.15175/ஒய்ஐ–1/2014, நாள் 04.02.2015.

*****

**ஆணை:**

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் தங்கப் பதக்கம் வெல்லும் பட்சத்தில் ரூ.50.00 இலட்சம் உயரிய ஊக்கத் தொகையாக வழங்கவும் உயரிய ஊக்கத் தொகை பெறுவதற்கான தகுதிகளுள் ஒன்றாக பதக்கம் வெல்பவர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளாக தமிழகத்தில் தொடர்ந்து வசித்து இருக்க வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர், கடந்த 19.09.2014 முதல் 04.10.2014 முடிய தென்கொரியா, இன்சியான் நகரில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்திய கபடி அணியின் சார்பாக கலந்து கொண்ட திரு.எஸ். ராஜகுரு, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, வடுவூர் தென்பாதியைச் சேர்ந்தவர் என்றும் தற்போது கர்நாடக மாநிலம் பெங்களூரில் அரசு வங்கிப் பணியில் உள்ளார் என்றும் தமிழகத்திலேயே பிறந்து வளர்ந்து பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்கள் வென்றுள்ளதை கருத்தில் கொண்டும், சென்னை பெரம்பூரில் உள்ள ரயில் பெட்டி

தொழிற்சாலையில் கடந்த 2009–2012 முடிய 4 ஆண்டுகள் பணிபுரிந்து வந்துள்ளார் எனவும், சமீபத்தில் இந்திய அரசால் வழங்கப்பட்ட ஆதார் அட்டையில் எண்.3/115பி, கீழத் தெரு, வடுவூர் புதுக்கோட்டை, மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம் எனக் குறிப்பிட்டுள்ளதை முன்னிட்டும், தமிழக அரசின் சிறப்பு உயரிய ஊக்கத்தொகையினை வழங்குமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலரின் செயற்குறிப்பை அரசு கவனமுடன் பரிசீலித்து, 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கபடி போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய அணியில் பங்கேற்ற திரு.எஸ். ராஜகுரு என்பவருக்கு மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் பத்தி 6(iii) க்கு தளர்வளித்து உயரிய ஊக்கத்தொகை ரூ.30,00,000/– (ரூபாய் முப்பது இலட்சம் மட்டும்) சிறப்பினமாக ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> “2204 00 விளையாட்டுகளும் இளைஞர் நலப் பணிகளும் – 104 போட்டி விளையாட்டுகளும் விளையாட்டுகளும்– I. திட்டத்தில் சேராதது – AR விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி வழங்கிட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு மானியங்கள்– 09 உதவித் தொகை –01 நடப்புச் செலவுக்கான உதவித் தொகை”
> (த.தொ.கு 2204 00 104 AR 0917)

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட கூடுதல் செலவினம் 2015–16 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்திய நிதியொதிக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய நிதியொதுக்கத்தை எதிர்நோக்கி மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலருக்கு அனுமதியளிக்கப்படுகிறது. இச்செலவினம் 2015–16 துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும். அச்செலவினத்தை 2015–16 துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கும் மற்றும் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கும் தனித்தனியாக கருத்துருக்களை உரிய நேரத்தில் நிதித் (வ.செ. பொ) துறைக்கு அனுப்புமாறு உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அறிவுறுத்தப்படுகிறார்.

6. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்கான பட்டியலை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் தயாரித்து அரசு சார்புச் செயலர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சென்னை–9க்கு சமர்ப்பிக்க வேண்டும். அத்தொகை ரொக்கமாக வழங்கப்படாமல், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை–84 தன் வைப்பு நிதிக் கணக்கு எண்.6184513932 என்ற பெயரில்

காசோலையாக வழங்கப்படும். அத்தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் வரவு வைப்பதற்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

"K வைப்புத் தொகைகளும் மற்றும் முன் பணங்களும் (B) வட்டி பெறாத வைப்புத் தொகைகள் – 8443 00 பொது வைப்புத் தொகைகள் – 800 ஏனைய வைப்புகள் – CH தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்"(த.தொ.கு 8443 00 800 CH 000D) (வரவுகள்)

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.42501/கல்வி–I/2015, நாள் 06.08.2015 ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது மற்றும் இதற்கான கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.694 (அறுநூற்று தொன்னூற்று நான்கு).

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹேமந்த் குமார் சின்ஹா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்.
உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை–84.
மாநில கணக்காயர், சென்னை– 9.
மாநில கணக்காயர், சென்னை– 18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை– 18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–9.
நகல்:
நிதித் (கல்வி. I, வரவு செலவு பொது. II &I ) துறை, சென்னை– 9.
அரசு கூடுதல் தலைமைச் செயலரின் தனிச் செயலர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சென்னை– 9.
அரசு துணைச் செயலர் / அரசு சார்புச் செயலர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சென்னை– 9.
தேசிய தகவல் மையம், தலைமைச் செயலகம், சென்னை – 9.
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 11.8.15.